25th September 1958]

THE HON. SRI P. KAKKAN : இந்த ஆயக்கட்டுகளுக்குள் வருகிறவர்களுடைய சாதக பாதகங்களை நன்ருகப் பரிசீலனை செய்தே கலெக்டர் அவர்கள் முடிவு செய்வார்கள்.

SRI G. GOMATHI SANKARA DIKSHITAR : மணிமுத்தாறு திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னுல் அந்தத் திட்டத்தினுடைய நன்மைகளைப் பற்றி விளக்கியும், அதனுல் நன்மை தீமை அடையப்போகிற எல்லா விவசாயிகளையும், நிலச்சுவாந்தார்களையும் கூட்டி அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டும் அதற்குத் தகுந்தபடி ஒழுங்கான முறையில் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அரசாங்கம் முன்வருமா என்று கேட்கிறேன் ?

THE HON. SRI P. KAKKAN : ஒவ்வொரு விவசாயியையும் கலந்து பேசுவது என்றுல் முடியாது. அங்கிருக்கும் கலெக்டர் எல்லா விஷயங்களையும் நன்ருகப் பரிசீலனை செய்து, எந்த முறையில் செய்யவேண்டுமோ அப்படிச் செய்யும்படியாகச் செய்கிறோம்.

SRI K. RAMASUBBU : மணிமுத்தாறு அணைக்கட்டை எந்த மாதம் எந்தத் தேதி திறப்பது என்று அரசாங்கம் முடிவு செய்துவிட்டதா ? 9-20 a.m.

THE HON. SRI P. KAKKAN : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

Supply of Electricity to villages

*517 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state the number of villages that were electrified under Mettur Electricity System during the second half of 1957–58?

THE HON. SRI V. RAMAIAH : Eighty-three villages.

SRI M. JAGANNATHAN : What steps have the Government taken to extend electrification to many more villages in that area?

THE HON. SRI V. RAMAIAH : Yesterday, I announced in this House that our progress was good in this respect and we are extending electrification to more and more villages. When more money becomes available, we can proceed with our work further.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: நீர்த்தேக்கங்களில்தண்ணீர்ப் பற்ருக்குறை இருப்பதாலும், பருவ மழை தவறியிருப்பதாலும், வருஷத்திற்கு ஒரு ஹார்ஸ் பவர் மின்சாரத்திற்கு 50 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் மினிமம் சார்ஜை 25 ரூபாயாகக் குறைக்க வேண்டுமென்றும், பம்பு செட்டிற்கு 10 வருஷங்களுக்குக் கொடுக்கும் " காரண்டி " யை 20 வருஷங்களாக உயர்த்த வேண்டும் என்றும், பல விவசாயிகளிடமிருந்து சர்க்காருக்கு விண்ணப்பங்கள் சென்றிருக்கின்றன. எனவே மினிமம் சார்ஜை 25 ரூபாயாகக் குறைக்கவும், காரண்டி அளிக்கும் காலத்தை 20 வருஷங்களாக அதிகரிக்கவும் சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : இதற்கு, கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

Panchayats in Nannilam and Nagapattinam taluks

*518 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா —

(அ) தஞ்சை ஜில்லா நன்னிலம், நாகபட்டிணம் தாலூகாக்களில் பஞ்சாயத்து பரிபாலனத்திற்கு உட்படாத, தாலூகாவாரியாக உள்ள கிராமங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளை மேற்படி பரிபாலனத்திற்கு உட்பட எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்னென்ன ?

[25th September 1958

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) There are 44 villages in Nannilam taluk and 69 villages in the Nagapattinam taluk for which panchayats have not yet been constituted.

(*b*) Action is being taken by the Regional Inspector and the District Panchayat Officer concerned to constitute panchayats for the above villages.

SRI M. C. MUTHUKUMARASWAMY : பஞ்சாயத்துக்களின் கீழ் இருக்கும் சில கிராமங்களில் ஒரே தெருவில் உள்ள இரண்டு சாரிகளில் ஒரு சாரி ஒரு பஞ்சாயத்தைச் சேர்ந்ததாகவும், மற்றொரு சாரி வேறொரு பஞ்சாயத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கிறது. இதன் காரணமாக ஒரே தெருவில் இரண்டு பஞ்சாயத்துக்கள் இயங்குகின்றன. இதனால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இந்தக் குறையை அரசாங்கம் நீக்குமா ? மேலும், ஒரு பஞ்சாயத்தில் 1,500-க்கு அதிகமான வோட்டர்களும் மற்றொரு பஞ்சாயத்தில் 1,000-க்கும் குறைவான வோட்டர்களும் இருக்கிறார்கள். இம்மாதிரி, பஞ்சாயத்துக்களிடையே சமத்துவமின்மை இருக்கிறது. இந்தக் குறையை நீக்கி பஞ்சாயத்துக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : பஞ்சாயத்துக்களை ஒழுங்காக அமைப்பதுதான் அரசாங்கத்தின் திட்டம். பஞ்சாயத்து அமைப்பில் ஏதாவது குறைகள் இருந்தால் அதை சர்க்காருக்கு தனிப்பட்ட முறையில் தெரிவிக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

Roads under National Extension Service Scheme

* 519 *Q.*—SRI T. VELUCHAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have any intention of acquiring lands for laying roads under the National Extension Service Scheme, if the owner of the land belongs to a neighbouring village, has no use for the land and refuses to part with it?

THE HON. SRI C. SUBRAMANIAM : When the land owners refuse to part with voluntarily lands required for a public purpose, lands are being acquired under the Land Acquisition Act. No other proposal is before the Government.

SRI V. K. KOTHANDARAMAN : பொது ரோடுகளை 25 அடி அகலம் கொண்டவையாக இருக்கும்போது, போக்குவரத்து குறைவாக இருக்கும் கிராமங்களில் 36 அடி அகல ரோடு போட முயற்சிக்கப்படுகிறது. கிராமங்களில் அவ்வளவு அகல ரோடு போடுவதற்கு போதிய இடம் இல்லாததால்தான் கிராமங்களில் ரோடுகள் போடப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? எனவே கிராமங்களில் அந்த அளவில் பாதி அளவு அகலமுள்ள ரோடுகளைப் போடுவதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பின்னர் ஏற்படக்கூடிய அவசியத்தையும் யூகித்து முன் ஜாக்கிரதையாக போதிய அகலமுள்ள ரோடுகளை அமைத்துக் கொள்வது தான் புத்திசாலித்தனம். இப்போது அகலக் குறைவான ரோடுகளைப் போட்டுக்கொண்டுவிட்டு பின்னர் கஷ்டப்படுவதைவிட, இப்போதே சிறிது கஷ்டப்பட்டு சற்று அதிக அகலமுள்ள ரோடுகளைப் போடுவதற்குத் தடையாக இருக்கும் குறைகளை நீக்குவதற்கு முன்வருவது தான் தேவலை என்று எனக்குத் தோன்றுகிறது.